

சென்னை பெரியார் திடலில், திராவிடர் கழகம் சார்பில் நடந்த தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவில் தி.மு.க பொதுச்செயலாளர் க.அன்பழகன், எழுத்தாளர் வே.மதிமாறன் மற்றும் இயற்கை ஆர்வலர் ம.யோகநாதன் ஆகியோருக்கு பெரியார் விருது வழங்கியபோது எடுத்தபடம். அருகில் திராவிடர் கழகத்தலைவர் கி.விரமணி, சுப.வீரபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

தினத்தந்தி 17.1.15

### திராவிடர் கழகம் சார்பில்

# தமிழ் புத்தாண்டு-பொங்கல் விழா

## பெரியார் விருதுகள் வழங்கப்பட்டன

சென்னை, ஜன.17-
திராவிடர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட தமிழ் புத்தாண்டு-பொங்கல் விழாவில், பெரியார் விருதுகள் வழங்கப்பட்டன.

### தமிழ் புத்தாண்டு-பொங்கல் விழா

திராவிடர் கழகம் சார்பில், தமிழ் புத்தாண்டு-பொங்கல் விழா 3 நாட்கள் நடைபெறுகிறது. இந்த விழாவில் 8 பேருக்கு பெரியார் விருதுகள் வழங்கப்பட உள்ளன. முதல்நாளான நேற்று 2 பேருக்கு பெரியார் விருதுகள் வழங்கப்பட்டது.

தமிழ் புத்தாண்டு-பொங்கல் விழா நேற்று மாலை 4 மணியளவில், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள மணியம்மை சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஒயிலாட்டம் மற்றும் சிலம்பாட்டத்துடன் தொடங்கியது. பின்னர் பெரியார் திடலில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, அதன் பிறகு அரங்கத்தில் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

### பெரியார் விருது

விழாவில், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, சுயமரியாதை சுடரொளி ஆ.திராவிடமணியின் திருவுருவ படத்தை திறந்து வைத்து, எழுத்தாளர் வே.மதிமாறன், இயற்கை ஆர்வலர் ம.யோகநாதன் ஆகியோருக்கு பெரியார் விருதுகளை வழங்கினார். தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் சிறப்புரை ஆற்றினார். திராவிடர் கழக துணைத் தலைவர் கலி.பூங்குன்றன் அறிமுகவுரை ஆற்றினார். முன்னதாக உயிர்நிழல் கானுயிர் ஒளிப்பட கண்காட்சியை திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன் திறந்து வைத்தார். திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் பொங்கலிட்டு இனிப்புகளை வழங்கினார்.

### உணவு திருவிழா

விழாவில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், உரியடி உள்பட பல்வேறு பண்பாட்டு விளையாட்டுகளும், இயற்கை

### அலமாரி, செருப்புகள், பலூன்:

# அங்கீகாரம் பெறாத கட்சிகளுக்கு 84 சின்னங்கள்

## தேர்தல் கமிஷன் அறிவிப்பு

புதுடெல்லி, ஜன.17-
தேர்தல் கமிஷன் அங்கீகாரம் பெற்ற கட்சிகளுக்கு அவர்கள் விரும்பிய தேர்தல் சின்னங்களையும், அங்கீகாரம் பெறாத கட்சிகளுக்கு என சில சுயேச்சை சின்னங்களையும் ஒதுக்குகிறது. அதன்படி கடந்த 13-ந்தேதி தேர்தல் கமிஷன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அங்கீகாரம் பெற்ற கட்சிகள் தேசிய அளவில் 6-ம், மாநில அளவில் 46-ம் உள்ளன. அவர்களுக்கு குறிப்பிட்ட சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பதிவு செய்யப்பட்ட 1,737 அங்கீகாரம் பெறாத கட்சிகள் உள்ளன. அவர்களுக்காக 84 சின்னங்கள் அறிவிக்கப்படுகிறது. அதில் முக்கியமான சில, அலமாரி, குளிரூட்டும் பெட்டி (ஏர்கண்டிஷனர்), ஆட்டோரிக்ஷா, பலூன், பழக்கூடை (தமிழ்நாடு தவிர), பேட், பேட்ஸ்மேன், பேட்டரி, டார்ச், பெல்ட், கரும்பலகை, பாட்டில், ரொட்டி, சூட்கேஸ், பிரஷ், வாளி, கேக், கால்குலேட்டர், கேமரா, மெழுகுவர்த்தி, தரைவிரிப்பு, கேரம் போர்டு, காலிபிளவர், செருப்புகள் ஆகியவை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### இலங்கை மந்திரி இந்தியா வருகையையொட்டி

# காரைக்கால் மீனவர்கள் 15 பேர் விடுதலை

## இலங்கை சிறையில் தமிழக மீனவர்கள் யாரும் இல்லை

புதுடெல்லி, ஜன.17-
இலங்கையில் அதிபர் சிறிசேனா தலைமையில் புதிய மந்திரி சபை அமைந்ததை தொடர்ந்து அங்குள்ள சிறையில் இருந்த தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். இலங்கை வெளியுறவு மந்திரி